முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நாகர்கோவிலுள்ள கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி அமைப்பின் இயக்குநர் பேராயர் அ.டன்ஸ்டன், குளச்சல் பங்குத் தந்தை ஜெகன், உள்நாட்டு மீனவ இயக்குநர் பேராயர் துரைசாமி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து பேசினார்கள். உடன் கழகத்தின் பொதுச் செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உள்ளனர்.

‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ முன்னெடுப்பில்

ரூ.1000 கோடி மதிப்பிலான உதவிகள் பெறப்பட்டுள்ளது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

சென்னை, நவ.5-

‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ முன்னெடுப்பில் இதுவரை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகள் பெறப்பட்டுள்ளது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

ஆயிரம் கோடியைத் தொட்டது நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி நிதி; நல்லுள்ளங்களுக்கு நன்றி!

இந்த ஆண்டு மட்டுமே 46,767 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் இந்தியாவிலேயே பள்ளிக்கல்வியில் பெரும் கவனம் செலுத்தி வருகிறது நமது திராவிடமாடல் அரசு.

அரசின் முயற்சிகளுக்குப் பக்கபலமாக, 5 லட்ச ரூபாயை முதல் நன்கொடையாக வழங்கி, நான் தொடங்கிவைத்த ‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ முன்னெடுப்பில் இதுவரை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகள் பெறப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் ஆயிரக் கணக்கிலான அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆய்வகங்கள், Smart வகுப்பறைகள், நவீன கழிப்பறைகள், திறன் பயிற்சிகள் உள்ளிட்ட பணிகளை அரசுப் பள்ளிகளில் நிறைவேற்றியுள்ளோம்!

நம்மை வளர்த்த சமூகத்துக்கும் பள்ளிக்கும் உதவ வேண்டுமென்ற உயர்ந்த உள்ளத்தோடு பங்களித்த 885 நிறுவனங்கள் & 1,500 நன்கொடையாளர்களுக்கும் நனி நன்றிகள்.

இத்தனை பேரின் நம்பிக்கையைக் காப்பாற்றும்படி வெளிப்படைத்தன்மையோடும் நேர்மையாகவும் செயல்பட்டு, நற்பெயரைப் பெற்றுத் தந்துள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் ‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ (NSNOP) அறக்கட்டளைத் தலைவர் வேணு சீனிவாசன் ஆகியோருக்குப் பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

மீனவர்கள் - மீன்பிடிப் படகுகளை விடுவிக்க உரிய நடவடிக்கை தேவை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, நவ.5 -

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 31 மீனவர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்களும், நேற்று முன்தினம் (03.11.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (03.11.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், 03.11.2025 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 31 மீனவர்களையும், அவர்களது மூன்று இயந்திரமய மாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளையும் சிறைபிடித்துள்ள இலங்கைக் கடற்படையினர், அதே நாளில், மற்றொரு சம்பவத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களையும், அவர்களது நாட்டுப் படகினையும் சிறைபிடித்துள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் வாழ்க்கையும், அவர்களது வாழ்வாதாரமும் கடலுடன் பிரிக்கமுடியாத வகையில் பின்னிப் பிணைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இது போன்று தொடர்ச்சியாக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தமிழ்நாட்டின் மீனவ சமூகத்தினரிடையே ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாக கவலையோடு தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு கைது நடவடிக்கையின்போதும், மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களது குடும்பத்தினரிடையே ஆழ்ந்த அச்ச உணர்வையும், பாதுகாப்பற்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, 114 மீனவர்களும், 247 படகுகளும் இலங்கை வசம் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

எனவே, இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்: 58 பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருச்சி கிராப்போர்டு புனித தெரசா சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் மற்றும் அரசு அலுவலர்கள், காஜாமலை, விஜய், கிராப்பட்டி செல்வம், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில்

ரூ.296.46 கோடியில் 72,880 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.5 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராணிப்பேட்டை மாவட்டத்தில் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 72,880 பயனாளிகளுக்கு 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.11.2025) இராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் சார்பில் மொத்தம் 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 72,880 பயனாளிகளுக்கு 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ஆற்காடு, திமிரி, வாலாஜா, அரக்கோணம், காவேரிப்பாக்கம், நெமிலி, சோளிங்கர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் அங்கன்வாடி மையம், ஊராட்சி மன்ற அலுவலகம், தானிய சேமிப்பு கிடங்கு, பால் கொள்முதல் நிலையம், பொது நூலகம், இருப்பிட கட்டடம், பள்ளி வகுப்பறை கட்டடம், உடற்பயிற்சி கூடம், பேருந்து நிழற்கூடம் என மொத்தம் 22.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92 முடிவுற்ற திட்டப் பணிகளையும், பொதுப்பணித் துறை சார்பில் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் புலிவலம், காவேரிப்பாக்கம், நெமிலி ஊராட்சி ஒன்றியம் மேல்களத்தூர், அம்மூர் மற்றும் கலவை ஆகிய இடங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 9.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 39 வகுப்பறை கட்டடங்களையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ஆற்காடு, இராணிப் பேட்டை, வாலாஜாப் பேட்டை, மேல்விஷாரம், அரக்கோணம் ஆகிய நகராட்சிகளில் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு குழாய் மற்றும் பம்பு அமைக்கும் பணிகள், சமுதாய கழிப்பிடம், பசுமை பூங்கா, பள்ளி வகுப்பறை, பல்நோக்கு கட்டடம், அங்கன்வாடி மையம், பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் புனரமைப்பு பணிகள் என 11.19 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 திட்டப் பணிகள் என மொத்தம் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் செக்கடிகுப்பம், வாலாஜா ஊராட்சி ஒன்றியம் திருமலைச்சேரி, திமிரி ஊராட்சி ஒன்றியம் அகரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள நீர்வரத்துக் கால்வாய்களின் குறுக்கே கட்டப்பட உள்ள 3 உயர்மட்ட மேம்பாலங்கள் மற்றும் திமிரி ஊராட்சி ஒன்றியம் குப்பிடிச்சாத்தம் ஊராட்சியில் துணை சுகாதாரம் நிலையம் கட்டும் பணி என 17.71 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 4 திட்டப் பணிகளுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நெமிலி வட்டம், மேலபுலம் ஊராட்சி தர்மநீதி கிராமம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகத்தில் 6.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கூடுதல் கிடங்குகள் மற்றும் வளாக சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டப் பணிகளுக்கும் என மொத்தம் 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

வீட்டுமனைப் பட்டா!

தொடர்ந்து துணை முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 12,075 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் இயற்கை மரண உதவித் தொகை என 135.29 கோடி ரூபாய்க் கான நலத்திட்ட உதவிகளை யும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு, சமுதாய முதலீட்டு நிதி, வாழ்வாதார நிதி, நுண் நிறுவன நிதிக்கடன், சுய உதவிக் குழு தனிநபர் கடன், ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பு, வட்டார வணிக வள மையம், சுழல் நிதி, இயற்கை பண்ணை தொகுப்பு,

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் அடையாள அட்டை என 50,160 குழு உறுப்பினர்களுக்கு 85.58 கோடி ரூபாய்க் கான நலத்திட்ட உதவிகளையும், உணவுப்பொருள் மற்றும் வழங்கல் துறை சார்பில் 5,177 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளையும், தொழி லாளர் நலத் துறை சார்பில் 3,417 பயனாளிகளுக்கு கல்வி, திருமண உதவித் தொகை, விபத்து மரணம் நிவாரணம் என 1.16 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 1,263 பயனாளிகளுக்கு 7.58 கோடி ரூபாய்க்கான பயிர் கடன் மற்றும் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளையும்,

தாட்கோ சார்பில் தொழில் முனைவுத் திட்டம்

தாட்கோ சார்பில் 257 பயனாளிகளுக்கு 1.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சரின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கான நலவாரிய அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் 180 பயனாளிகளுக்கு தார்பாலின், தெளிப்பு நீர்ப்பாசனம், பவர் டில்லர், நுண்ணூட்ட கலவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் 14 பயனாளிகளுக்கு 13.67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிழல் கூடாரம், நிரந்தர கல்தூண் பந்தல், பண்ணைக் குட்டை, மண்புழு உர கூடாரம், சிப்பம் கட்டும் அறை, நுண்ணீர் பாசனம் அமைத்தல் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு பவர் டில்லர்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 150 பயனாளிகளுக்கு 3.35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரங்களையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 45 பயனாளிகளுக்கு 30.29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சக்கர நாற்காலி, பெட்ரோல் ஸ்கூட்டர், காதொலிக் கருவிகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 43 பயனாளிகளுக்கு 2.97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முஸ்லீம் மகளிர் உதவித் தொகை, கிருத்துவ மகளிர் உதவித் தொகை, சலவை பெட்டி, சீர்மரபினர் அடையாள அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், தமிழ்நாடு தொழில் வணிக துறை,

மாவட்ட தொழில் மையம் சார்பில் 33 பயனாளிகளுக்கு 110.52 இலட்சம் ரூபாய்க்கான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்களின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவிகளையும், மாவட்ட சமூக நலத் துறை சார்பில் 30 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபாய்க்கான வைப்பு நிதி பத்திரங்களையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 30 பயனாளிகளுக்கு 162.24 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும் என மொத்தம் 72,880 பயனாளிகளுக்கு, 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில்

எஸ்.ஐ.ஆர். நடைமுறைப்படுத்துவதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் ஆர்.எஸ்.பாரதி வழக்கு!

சென்னை, நவ. 5 -

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 2.11.2025 அன்று சென்னையில் நடைபெற்ற ‘அனைத்துக் கட்சிக் கூட்டத்தில்‘ “தமிழ்நாட்டு வாக்காளர்கள் அனைவரின் வாக்குரிமையையும் நிலைநாட்ட உச்சநீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. தேர்தல் ஜனநாயகத்தைக் காப்பாற்றிட தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வது என இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தீர்மானிக்கிறது.” என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க;

நேற்று முன்தினம் (3.11.2025) உச்சநீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர்.ஐ நடைமுறைப்படுத்துவதை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., அவர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

அம்மனுவில் “எஸ்.ஐ.ஆர். நடைமுறைப்படுத்த உகந்த காலம் இதுவல்ல என்றும்; தேர்தல் ஆணையத்துக்கு இந்த நடைமுறையை செயல்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை என்றும்; அரசிலமைப்புச் சட்டம் தந்த அதிகாரங்களை மீறி தேர்தல் ஆணையம் செயல்படுவதாவும்; தகுதி உள்ளவர்கள் நீக்கப்படுவதற்கும் - தகுதியற்றோர் சேர்க்கப்படுவதற்கும் ஏதுவான வகையில் இந்த நடைமுறை அமைந்துள்ளதாகவும்; இந்த எஸ்.ஐ.ஆர்.ஐ நடைமுறைபடுத்தினால், இலட்சக்கணக்கான தமிழ்நாடு வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை இழக்கும் அபாயம் ஏற்படும் போன்ற முக்கிய காரணங்களை சுட்டிக் காட்டி இம்மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு வருகிற நவம்பர் 6 அல்லது 7ஆம் தேதி உச்ச நீதி மன்றத்தில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எஸ்.ஐ.ஆர்ஐ எதிர்த்து தி.மு.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் மனு விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் சார்பில்

மாமன்னன் இராசராச சோழன் 1040-வது சதய விழா!

ச.முரசொலி எம்.பி – மேயர் சண்.இராமநாதன் – து.செல்வம் பங்கேற்பு!

தஞ்சாவூர், நவ. 5 -

தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோயிலில் மாமன்னன் இராசராச சோழன் அவர்களின் 1040 வது ஆண்டு சதய விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் மாமன்னன் இராசராச சோழன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு எம்.பி, மேயர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பார் ஆண்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த மாமன்னன் இராசராச சோழன் அவர்களின் பிறந்தநாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் அரசு விழாவாக 2023 ஆம் ஆண்டு முதல் சதய விழா கொண்டாடப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்க்கிணங்க, தஞ்சாவூர் அருள்மிகு பெரு வுடையார் திருக்கோயி லில் மாமன்னன் இராசராச சோழன் அவர்களின் 1040வது ஆண்டு சதய விழாவில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாமன்னன் இராசராசசோழன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சதய விழா குழுத் தலைவர் து.செல்வம், தஞ்சை மாநராட்சி மேயர் சண்.இராமநாதன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், தருமபுர 27வது தலைமை மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியர் சுவாமிகள், தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் ப.நித்யா அவர்கள், பரம்பரை அறங்காவலர் இராஜா ஸ்ரீ பாபாஜி ராஜா போன்ஸ்லே, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் மு.ஜோதிலட்சுமி, உதவி ஆணையர் கே.கவிதா (அரண்மனை தேவஸ்தானம்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.பாரதி, மாவட்ட சுற்றுலா அலுவலர் வரதராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.